**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure/ BNSS)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.III, ERODE.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | CC No. 828/2025 | Date | : | 17.06.2026 |
| Deposition of Witness for | : | அ.சா. 3 | Taluk | : | |
| Name | : | வேலுச்சாமி | Calling | : | |
| Father Name | : | ராஜ் | Religion | : | |
| Village | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 17.06.2026

(எதிரி ஆஜர்படுத்தப்பட்டார், எதிரியின் வழக்கறிஞர் ஆஜர். ).

**அரசு தரப்பு முதல் விசாரணை:**

1. நான் ஈரோடு மாவட்டம் சித்தோடு டாக்டர் அம்பேத்கர் நகரில் குடியிருந்து சென்ட்ரிங் வேலை செய்து வருகிறேன். கடந்த 15.05.2023-ம் தேதிபகல் சுமார் 02.30 மணி அளவில் நானும் எனது நண்பர் கோவிந்தராஜ் என்பவரும் காலிங்கராயன் பாளையம் கிரேஸ் ஸ்கூல் அருகே உள்ள புதிதாக கட்டி வரும் வீட்டில் சென்ட்ரிங் வேலை செய்து கொண்டிருந்தோம். அருகில் உள்ள ஒரு வீட்டில் சார்ஜ் போட்டு வைத்திருந்த செல்போனை ஒரு நபர் திருடிக் கொண்டு சென்றதாக அருகில் இருந்தவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள்.

2. அன்றைய தினமே மாலை சுமார் 05.30 மணி அளவில் போலீசார் அங்கு வந்து திருடு போன வீட்டின் முன்பு நின்று படம் வரைந்தார்கள் அதில் எங்களை சாட்சி கையொப்பம் செய்ய சொன்னார்கள் நானும் கோவிந்தராஜன் சாட்சி கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடைய தான். இரண்டாவது சாட்சி கையொப்பம்

கோவிந்தராஜ் என்பவருடையதாகும். **(பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் அ.த.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

**குறுக்கு விசாரணை**

நான் வேலை செய்த இடத்தில் வைத்துதான் கையொப்பம் செய்தேன் என்றால் திருடு போன வீடும் நான் வேலை செய்த இடமும் பக்கமாக தான் உள்ளது. நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எங்கள் முன்னிலையில் படம் வரையவில்லை என்றால் சரியல்ல எங்கள் முன்னிலையில் தான் படம் வரைந்தார்கள்.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2026.06.17 17:05:10 +0530

Judicial Magistrate No.III,
Erode.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure/ BNSS)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.III, ERODE.**

| | | | |
|---|---|---|---|
| Case No | : CC No. 828/2025 | Date | : 17.06.2026 |
| Deposition of Witness for | : அ.சா. 4 | Taluk | : |
| Name | : குகனேஷ்வரன் | Calling | : |
| Father Name | : | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 17.06.2026

**(சாட்சி காணொலி மூலம் சாட்சியம் அளிக்கிறார்)**

(எதிரி ஆஜர்படுத்தப்பட்டார், எதிரியின் வழக்கறிஞர் ஆஜர். ).

**அரசு தரப்பு முதல் விசாரணை:**

1. நான் தற்போது சித்தோடு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 15.05.2023ம் தேதி மதியம் 16.00மணிக்கு சித்தோடு காவல் நிலையத்தில் முதல் நிலைய அலுவலரான சந்தோஷ்குமார் என்பவர் நிலைய அலுவலில் இருந்தபோது, முருகேசன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று நிலைய குற்ற எண்.196/2023 சட்டப்பிரிவுகள் 380 இதச பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்து வாதியின் புகாருடன் முதல் தகவல் அறிக்கையின் அசலை இணைத்து நீதித்துறை நடுவர் எண்.3 அவர்களுக்கு அனுப்பிவைத்தும், ஒரு நகலை புலன்விசாரணைக்காக எடுத்துக்கொண்டேன். **(முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

2. நான் புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 15.05.2023ம் தேதி காலை 16.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் வேலுச்சாமி மற்றும் கோவிந்தராஜ்

ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து பார்வை மகஜரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். **(பார்வை மகஜர் அ.த.சா.ஆ. 6 ஆகவும், மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ 7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).**

3. சாட்சிகள் முருகேசன், செந்தில்குமார், சாந்தி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். பின்பு முருகேசனும், செந்தில் குமாரும் சேர்ந்து அஜித்குமாரையும் அவர் திருடிய செல்போனையும் சித்தோடு காவல் நிலையத்திற்கு கொண்டு வந்து ஒப்படைத்து 15.05.2023ம் தேதி 16.00 மணிக்கு எழுத்து மூலமான புகாரை அளித்தனர். ஆஜர் எதிரி அஜித்குமாரை நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தேன். வழக்கு சொத்துக்களை படிவம் 91ல் கைப்பற்றி நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். **(படிவம் 91 அ.த.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்பு நான் புலன்விசாரணையை முடித்து எதிரி மீது இதச பிரிவு 380 இதச – ன் படி குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

1. எதிரியை 02.30 மணிக்கு பிடித்ததாக கூறியுள்ள நிலையில் மாலை 04.00 மணிக்கு தான் காவல் நிலையத்தில் ஒப்படைத்ததாக கூறியுள்ள நிலையில் காலதாமதத்திற்கான காரணம் என்னவென்று விசாரணை செய்து தெரிந்து கொண்டேனா என்றால் எதிரியை பிடித்த பிறகு வாதி அவரை விசாரித்து விட்டு காவல் நிலையம் அழைத்து வந்ததால் காலதாமதம் ஏற்பட்டதாக தெரிந்து கொண்டேன். மேற்படி வீட்டில் செல்போன் சார்ஜ் எங்கு வைத்து போடப்பட்டது என்பது பற்றி பார்வை மகஜரிலோ அல்லது மாதிரி வரைபடத்திலோ குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டு காட்டவில்லை.

2. நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும் எதிரி தான் குற்றவாளி என்று தவறுதலாக பிடித்து வந்து ஒப்படைத்தார்கள் என்றும் நான் சரிவர விசாரணை செய்யாமல் எதிரி மீது குற்ற இறுதி அறிக்கையை தாக்கல்

**செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும் இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.**

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

S R BABU
Digitally signed by S R BABU
Date: 2026.06.17 17:05:16 +0530

Judicial Magistrate No.III,
Erode.